# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

**අති විශෙෂ**

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2240/7 - 2021 අගෝස්තු මස 09 වැනි සඳුදා - 2021.08.09

2240/7 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 09 ஆந் திகதி திங்கட்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி III - காணிகள்

### காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: MLB/LND/LNDAQ/LI/57.

காணி அமைச்சின் குறிப்பு இல.: 4-3/9/2017/WS/34.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக் கொள்ள அரசாட்சியார் எண்ணி யிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட் பிரிவின் கீழ் நான், இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

தென் மாகாணம், மாத்தறை மாவட்டம், மாலிம் படை பிரதேச செயலாளர் பிரிவில், கட்டுவன்கொட கிராமத்தில் அமைந்துள்ளதும் முற்பிரதிப்பட இலக்கம் மாற/2856 வரைபடத்தில் துண்டு இலக்கம் 01 எனக் காட்டப்பட்டுள்ள கீழ்க் குறித்த காணி மாத்தறை iv ஆம் கட்ட நீர் வடிகாலமைப்பு திட்டத்தின் கீழ் மாலிம் படையில் ஆழமான கிணற்றையும் நீர் விநியோக அறைக்கு செல்லும் வீதியை விஸ்தரிப்பு செய்வதற்கு மேலதிக காணிப் பகுதியை எடுத்துக்கொள்ள தீர்மானித்துள்ளது.

1. **துண்டு இல. 01**

காணியின் பெயர்: ஹோம்பலஹேன; விபரம்: வீட்டுத் தோட்டம்; உரிமை கோருவோர்: கே. எம். குணதாஸ; விஸ்தீரணம்: 0.0013 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரிமை கோருகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில்




*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2021 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 17 ஆந் திகதி மு.ப. 10.30 மணிக்கு மாலிம்பட பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும்படியும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்ட ஈட்டுத் தொகையையும் அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2021 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 10 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் முற்பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

கே. ஜீ. ஆர். ஜயநாத்,
பிரதேச செயலாளர்,
மாலிம்படை.

பிரதேச செயலகம்,
மாலிம்படை,
2021, யூலை 30.
08 - 358